DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT JUDGE, ERODE.
**O.S.No.** 63/2018

Deposition of Witness : PW. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகலட்சுமி | க/பெ. | : | நாச்சிமுத்து |
| கிராமம் | : | ஜெயராமபுரம் | தாலுகா | : | மொடக்குறிச்சி |
| தொழில் | : | இல்லத்தரசி | வயது | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 10-02-2026.

குறுக்கு விசாரணை (சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)

கருப்பணகவுண்டர் எனது தாத்தா என்றால் சரிதான். எனது தாத்தா கருப்பணகவுண்டருக்கு எனது தந்தை நல்லமுத்து கவுண்டர், பாப்பாயி மற்றும் பெரியம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தாத்தா கருப்பணகவுண்டருக்கு பாத்தியம் என்றால் சரிதான். எனது சகோதரர் மாதேஸ்வரன் என்பவருக்கு ராசப்பன் என்ற பெயரும் உண்டு என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து கருப்பணகவுண்டர் எனது சகோதரருக்கு உயில் எழுதி வைத்துள்ளதால் தான் எனது இரண்டு அத்தைகளுக்கும் சொத்தில் பங்கு இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. எனது அத்தைகளுக்கு சொத்தில் பங்கு இல்லை என்றால் தற்பொழுது எனது அத்தைகளுக்கு சொத்தில் பங்கு இல்லை. எனது தாத்தா கருப்பணகவுண்டர் எனது சகோதரருக்கு உயில் எழுதி வைத்ததில் சொத்து முழுவதும் எனது சகோதரருக்கு பாத்தியப்பட்டுவிட்டதால் எனது அத்தைகளுக்கு பாத்தியம் இல்லை என்பதை எனக்கு தெரியும் என்றும், அதனை மறைத்து தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் தவறு. 10-07-1996ம் தேதியில் என் பெற்றோர் மற்றும் எனது இறந்துபோன சகோதரரின் மகள் மற்றும் மனைவி ஆகியோர்கள் சேர்ந்து சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள் என்றால் அவர்கள் பிரித்துக்கொண்டதை என்னிடம் சொல்லவில்லை. அரச்சலூர் கிராமம், வெட்டுக்காட்டுவலசு, நாச்சிமுத்து மனைவி நாகலட்சுமி என்பது நான் தான். 19-03-1993ம் தேதியில் எனது தகப்பனார் மற்றும் தாயார் ஆகியோர்கள் பூசப்பன் என்பவருக்கு 2 ஏக்கர் சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.02.10 18:58:50 +0530

கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1996ல் ஏற்பட்ட பாக பிரிவினையில் எனது தகப்பனாருக்கும், தாயாருக்கும் 4 ஏக்கர் 25 சென்ட் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் அதை என்னிடம் சொல்லவில்லை. பாகக்கராரில் பிரிந்த சொத்தை தான் எனது தாயாரும், தந்தையும் பூசப்பனுக்கு விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு அவைகள் எது என்று தனக்கு தெரியாது என சாட்சியம் அளிக்கிறார். பூசப்பனுக்கு விற்பனை செய்த 2 ஏக்கர் போக மீதமுள்ள பூமியில் 1 ஏக்கர் 89 சென்ட் சொத்தை 16-09-2008ல் நான், எனது தாயார், எனது சகோதரி, 1, 2 பிரதிவாதிகள் ஆகியோர்கள் சேர்ந்து இளங்கோ மற்றும் சண்முகம் ஆகியோர்களுக்கு விற்பனை செய்தோம் என்றால் சரிதான். அவ்வாறு விற்பனை செய்த சொத்துக்கள் போக அதனை ஒட்டி மீதம் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு உள்ள மீதம் உள்ள சொத்துக்களில் எனது இறந்துபோன சகோதரரின் வாரிசுகளான 1, 2 பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 16-09-2008 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் நான் கையொப்பங்கள் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 16-09-2008 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். 10-07-1996 தேதியிட்ட பாக ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு பிரிந்த பூமியில் 2 ஏக்கர் பூமியை பூசப்பனுக்கு விற்பனை செய்த விபரத்தையும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்த விபரத்தையும் எனது பிராதிலும் மற்றும் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் எனக்கு அவ்வளவாக படிப்படிறிவு இல்லாததால், எனக்கு தெரியாது. 16-09-2008 தேதியிட்ட கிரைய ஆவணத்தை நான் வேண்டும் என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு இல்லை. பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH

Digitally signed by V SURESH
Date: 2026.02.10 18:58:59 +0530

II Addl. District Judge, Erode.